PERMANENT REFERENCE

# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE ERAVUR PATTU (TAMIL) DIVISIONAL SECRETARIAT DIVISION

LIBRARY
18-9-1998
EASTERN UNIVERSITY Sri Lanka

MR. ARUMUGAM SHANMUGARAJAH

PROCESSED
Main Library, EUSL

03
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY, SRI LANKA

1996

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அத்தியாயம் - 01 | |
| | அறிமுகம் | 1 - 5 |
| 02. | அத்தியாயம் - 02 | |
| | நூல் ஆய்வு | 6 - 17 |
| 03. | அத்தியாயம் - 03 | |
| | ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவும் தற்போதைய நிலைப்பாடும் | 18 - 27 |
| 04. | அத்தியாயம் - 04 | |
| | விவசாயம் பற்றிய ஆய்வு | 28 - 40 |
| 05. | அத்தியாயம் - 05 | |
| | கல்வி பற்றிய ஆய்வு | 41 - 51 |
| 06. | அத்தியாயம் - 06 | |
| | மீன்பிடி பற்றிய ஆய்வு | 52 - 61 |
| 07. | அத்தியாயம் - 07 | |
| | வீட்டு வசதி பற்றிய ஆய்வு | 62 - 73 |
| 08. | அத்தியாயம் - 08 | |
| | சுகாதாரம் பற்றிய ஆய்வு | 74 - 82 |
| 09. | அத்தியாயம் - 09 | |
| | சிறுகைத்தொழில் பற்றிய ஆய்வு | 83 - 89 |
| 10. | அத்தியாயம் - 10 | |
| | சுயதொழில் பற்றிய ஆய்வு | 90 - 96 |
| 11. | அத்தியாயம் - 11 | |
| | புனர்வாழ்வு பற்றிய ஆய்வு | 97 -105 |
| 12. | அத்தியாயம் - 12 | |
| | புனர்நிர்மாணம் பற்றிய ஆய்வு | 106 -110 |
| 13. | அத்தியாயம் - 13 | |
| | கூட்டுறவு பற்றிய ஆய்வு | 111 -116 |
| 14. | அத்தியாயம் - 14 | |
| | செயற்திட்ட வடிவமைப்பு | 117- 134 |
| | அடிக்குறிப்பு | |
| | உசாத்துணை நூல்கள் | |
| | பின்னிணைப்புக்கள். | |

# திட்ட ஆய்வு அறிக்கைச் சுருக்கம்

எறாவூர்ப்பற்று(தமிழ்) பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொண்ட ஆய்வின் மூலம் அங்கு காணப்பட்ட வளங்களைக் கொண்டு விவசாயம், கல்வி, மீன்பிடி, வீட்டுவசதி, சுகாதாரம், சிறுகைத்தொழில், சுயதொழில், புனர்வாழ்வு, புனரமைப்பு, கூட்டுறவு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் தந்திரோபாயத்திட்டமிடல் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட நிறைவேற்றக்கூடிய சுருக்கம்.

இப்பிரதேசத்தில் காணப்படும் விவசாய நிலங்களை உச்சப்பயன்படுத்தலை நோக்கமாகக் கொண்டு நீர்ப்பாசன வசதி, வடிச்சல் வசதிகளையும் நல்லின குறுகிய கால விதைகளைப் பயன்படுத்த பாமர முறையைக் கைவிட்டு நவீன முறைகளை பயன்படுத்தல் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், விவசாயிகளுக்கு உள்ளீட்டுப்பொருட்களை வழங்கி வெளியீட்டுப்பொருட்களைச் சந்தைப்படுத்தக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் நெல் விவசாயம் மட்டுமன்றி மேட்டுநிலப் பயிர்களையும் விரிவுபடுத்துவதனால் விவசாயம் மூலம் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.

கல்வி சம்பந்தமான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் மக்களின் கலாச்சாரத்துடன் சம்பந்தமாக கல்வியை வழங்குவதுடன் தொழில்நுட்பக் கல்வியையும் அளிப்பதனால் அதிகமானவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்கக் கூடியதாக அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடியதாகவும் இருக்கும்.

கடல் பிரதேசத்தை அண்மித்ததாக இருந்தும் ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஆர்வம் அற்றவர்களாக இருப்பதன் காரணம் போதிய முதலின்மையும், ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கான அடிப்படை வசதியின்மையுமாகும். இவற்றை ஈடுசெய்வதாயின் கடன் வசதிகளை அளிப்பதுடன் நவீன நுட்பங்களையும் பயிற்றுவிக்க வேண்டும். நன்னீர் மீன்பிடித்தலைப் பொறுத்தவரையில் ஈடுபடுபவர்களுக்கு நவீன முறைகளை அறிமுகப்படுத்துவதுடன் நன்னீர் மீன்களை சந்தைப்படுத்தக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் மீனவர்களின் எதிர்கால சமூகப் பொருளாதாரத்தை பேணுவதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்தி ஆர்வத்தை அதிகரிப்பதன் மூலம் அபிவிருத்தியடையச் செய்யலாம்.

வீடற்றவர்களின் குறைகளை போக்குவதாயின் யாவர்க்கும் வீடு அமைக்கும்

அரசின் திட்டங்களை இப்பகுதி உயர்மட்ட அலுவலர்கள் பெற்றுக்கொடுப்பதுடன் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு குறைந்த செலவிலும் அமைப்பதுடன் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களை- இப்பகுதியிலும் அறிமுகப்படுத்திக் கொடுப்பதுடன் மின்சாரக் கடன், மலசலகூடம், கிணறு, அமைப்பதற்கான கடன் போன்றவற்றிற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வைத்தியசாலைகளின் வசதிகள் தேவைகள் விரிவுபடுத்தப்படுவதாலும் -- சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்களை சகல பிரிவினர்கட்கும் உணர்த்துவதனாலும் சுகாதார ஊழியர்களின் குறையை நிவர்த்தி செய்வதனாலும் அரசியல் ரீதியான பாரபட்சம் நீக்கப்படும் நிலையிலும் சகல மக்களும் பொது சுகாதாரத்தை கடைப்பிடிப்பதன் மூலமாக எதிர்காலத்தில் பூரண அபிவிருத்தியை அடையக்கூடியதாக இருக்கும்.

சிறுகைத்தொழிலைப் பொறுத்தவரையில் உற்பத்தியை அதிகரிக்கக்கூடியதாக கடன் வசதிகளையும் உள்ளீட்டுப் பொருட்களையும் வழங்கக்கூடியதாகவும் வெளியீட்டுப் பொருட்களைச் சந்தைப்படுத்தக்கூடியதாகவும் திட்டங்களை வகுத்தலும் நவீன முறையிலான பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக - அதிகளவானவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வருமானத்தைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யலாம்.

சுயதொழிலில் ஈடுபடுபவர்கள் தங்களின் கலாச்சாரத் தொழில்களில் ஈடுபடுவதனாலும் போதிய முதலை முதலிடாதவர்களாக இருப்பதனாலும் வருமானத்தைப் பெருக்க முடியாதுள்ளது. இவற்றை ஈடுசெய்வதன் மூலமாக- உற்பத்தியை அதிகரிக்கச் செய்து வருமானத்தைப் பெருக்கலாம்.

புனர்வாழ்வுத்திட்டத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளும்போது பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தவரை நேரடியாகச் சேரக்கூடியதாக நடவடிக்கைகளை எடுத்தல்.- அத்துடன் உடனடியாக கிடைக்கவும் வழிசெய்தல். மேலும் அயற்பிரதேசங்களில் இயங்கும் இணைப்பாளர்களின் தேவையைக் கொண்டதான சேவைகளையும் நடைமுறைக்கு கொண்டுவருவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு உடனடி நடவடிக்கைகளையும் வழங்கல்.

[illegible]மைப்பு பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதியானது குறிப்பிட்ட திட்டங்களை பூரணமான முறையில் பூர்த்தி செய்யக்கூடியதாக திட்டங்களை உருவாக்குதல். அவ்வாறு உருவாக்கப்படுபவை அபிவிருத்தி சம்பந்தமான ---

நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவையாக காணப்படும் பட்சத்தில் முறைரீதியான வளர்ச்சியை ஏற்படுத்தி அபிவிருத்தியை மேற்கொள்ளலாம்.

கூட்டுறவை அபிவிருத்தி செய்வதன் மூலம் இப்பகுதியில் மக்களின் முன்னேற்றத்தை அதிகரிக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது புதிய கிளைகளை நிறுவுதல் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தல் ஏனையவகைகூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் உள்ளீட்டுப் பொருட்களை வழங்கல் அவர்களது உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மக்களுக்குத் தேவையான தரமான அத்தியாவசியப் பொருட்களை வழங்கல். கிராமிய வங்கியின் சேவையை ஆரம்பித்து மக்களின் சேமிப்பை ஊக்கப்படுத்தலும் கடன் வசதிகளை அளித்தலும், இவைகளாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.